









# வானகமே.. இளவெயிலே.. மரச்செறிவே...

## திராவிட மாடல் அரசு

79

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

மனிதர்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு ஆரோக்கியமான உணவு மட்டும் போதாது. சமூகத்துக்குத் தூய்மையான காற்று, நீர் வளம், வளமான மண், உயிர்ப் பன்மை போன்ற இயற்கை சார்ந்த விஷயங்களும் தேவை. இவை எல்லாவற்றையும் சேர்த்துத்தான் நாம் சுற்றுச்சூழல் என்கிறோம். அந்தச் சுற்றுச்சூழல் ஆரோக்கியமாக இருப்பதற்கு உதவுவது வனங்கள்.

பல்வேறு வகையான மரங்கள், செடிகள், கொடிகள் நிறைந்திருக்கும் பகுதிதான் வனம். அந்த வனங்கள்தான் கரியமில வாயுவினை மறுசுழற்சி செய்து, அதன் வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்தி, பருவநிலையை முறைப்படுத்த உதவுகின்றன. அதன் மூலம் வறட்சி, வெள்ளம் உள்ளிட்ட பல இயற்கைச் சீற்றங்கள் தணிக்கப் படுகின்றன.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வனச்சூழலைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமை யிலான ‘திராவிட மாடல் அரசு’, பல்வேறு திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறது. அவற்றில் ஒன்றுதான் ‘பசுமை தமிழ்நாடு இயக்கம்’.

### எங்கெங்கு நோக்கினும் பச்சை

நாட்டில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கும் வனங்களின் பரப்பளவை ஆய்வுசெய்ய, ஒன்றிய அரசின் கீழ் இந்திய வனக் கணக்கெடுப்பு மையம் இயங்கி வருகிறது. அது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை, வனப் பரப்பு குறித்து கணக்கெடுப்பு நடத்தும். அதன்படி, 2019–ஆம் ஆண்டில் 26 ஆயிரத்து 364 சதுர கிலோ மீட்டராக இருந்த தமிழ்நாட்டின் வனப்பரப்பு, 2021–ஆம் ஆண்டில் 26 ஆயிரத்து 419 சதுர கிலோ மீட்டராக உயர்ந்திருக்கிறது. அதாவது, தமிழ்நாட்டில் மொத்தம் 23.7 சதவிகித அளவுக்குக் காடுகள் இருக்கின்றன.

இந்த எண்ணிக்கையை 33 சதவிகிதமாக உயர்த்துவதற்கு ‘திராவிட மாடல் அரசு’ எடுத்துள்ள முயற்சிதான் ‘பசுமை தமிழ்நாடு இயக்கம்’. 2021–2022–ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், மாநிலத்தின் வன வளத்தைப் பாதுகாக்க, இப்படி ஓர் இயக்கம் தேவை என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, 2022–ஆம் ஆண்டு செப்டம்பர் 24 அன்று இந்த இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டது. அடுத்த 10 முதல் 15 ஆண்டுகளில், தமிழ்நாட்டின் காடு மற்றும் மரங்களின் அடர்த்தியைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டு இந்த இயக்கம் செயல்பட்டு வருகிறது.

### கரம் கோப்போம், மரம் நட !

இந்த இயக்கத்தில் மாநில அரசுடன், தனியார் நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், கல்வியாளர்கள், வணிகர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாண வர்கள், இளைஞர்கள் ஆகியோர் கரம் கோத்துள்ளனர்.

அதன் மூலம், 2021–2013–ஆம் நிதியாண்டில் 3.14 கோடி மரக்கன்றுகள் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் வளர்க்கப்பட்டு, 61 ஆயிரத்து 551 ஹெக்டேர் பரப்பில் அவை நடவு செய்யப்பட்டன. அந்தப் பணிக்காக, 67.27 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, 1.01 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டன. இதில் 9.26 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டு, பசுமை வேலை வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டன.

தொடர்ந்து, 2023–2024–ஆம் ஆண்டு நிதியாண்டில் 1.49 கோடி மரக்கன்றுகள் உருவாக்கப்பட்டு, 75 கோடி ரூபாய் செலவில் அவை நடவு செய்யப்பட்டன. மீதமிருந்த மரக்கன்றுகள் நபார்டு, தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஆகியவற்றின் மூலமாக நடவு செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம், சுமார் ஒரு லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் 2023–இல் நடவு செய்யப்பட்டுள்ளன.

### நாட்டு மரங்களுக்கு முக்கியத்துவம்

இவ்வாறு நடவு செய்யப்படும் மரங்களில் பெரும்பாலானவை நாட்டு மர வகைகளைச் சேர்ந்தவையாக இருக்கின்றன. பருவநிலை மாற்றத்தினால், ஏற்படும் பேரிடர்களை எதிர்கொள்ளும் திறன்மிக்கவையாக நாட்டு மரங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மரங்களை நகர்ப்புற பகுதிகள், விவசாயப் பண்ணைகள், கல்வி நிறுவனங்கள், கோயில் நிலங்கள், தொழிற்சாலைகள், தொழிற்சாலை களுக்குச் சொந்தமான நிலங்கள், ஏரிக்கரைகள், நீர்ப்பிடிப்புப் பகுதிகள், ஆற்றுப் படுகைகள் போன்ற இடங்களில் நடவு செய்ய நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



இது தவிர, விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, **‘வேளாண் காடு வளர்ப்பு’** எனும் திட்டம் மூலம், 27 ஆயிரத்து 793.40 ஹெக்டேர் பரப்பில் வேளாண் நிலங்களில் தேக்கு, மகோகனி, சந்தனம், செம்மரம், சவுக்கு, புங்கன், வேம்பு உள்ளிட்ட மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு தமிழ்நாட்டின் பசுமைப் பரப்பை யும், அதன் மூலம் சுற்றுச்சூழலையும் ஆரோக்கி யத்தையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் இந்த இயக்கத்தின் முயற்சியில், வனத்துறையுடன், உழவர் நலத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகியவையும் இணைந்துள்ளன.

நிற்பதுவும் நடப்பதுவும் பறப்பதுவும் இனி, தமிழ்நாட்டில் மகிழ்ந்திருக்கட்டும்....!

**...சாதனை தொடரும்**

### போட்டோ பிடிக்கலாம்... பாதுகாக்கலாம்..!

பொதுவாக, இதர அமைப்புகள் மேற்கொள்ளும் மரம் நடும் விழாக்கள் எல்லாம் பெயருக்கு நடத்தப்படுவதாகவே இருக்கின்றன. ஏதேனும் ஒரு சிறப்பு நாளில், சில பிரபலங்களை அழைத்து மரக்கன்றுகளை நட்டுவிட்டு, பிறகு அவை மறக்கப்பட்டு விடுகின்றன. ஆனால் ‘திராவிட மாடல் அரசு’ ஏற்படுத்தியிருக்கும் ‘பசுமை தமிழ்நாடு இயக்கம்’ இதிலும் ஒரு புதுமையைக் கடைப்பிடித்துள்ளது.

இந்த இயக்கத்தின் கீழ் மாநிலம் முழுவதும் நடப்படும் நாற்றங்கால்களின் நடவு, அவற்றின் பிழைப்புத் திறன் (சர்வைவல் ரேட்) ஆகியவற்றைக் கண்காணிப்பதற்கு, ஒவ்வொரு மரக்கன்றுகளுக்கும் ஒரு புவிசார் இணைப்பு (ஜியோ டேக்) அளிக்கப்பட்டுள்ளது. இந்த இயக்கம் தொடங்கப்பட்ட நாள் முதல் இப்போது வரை சுமார் 5 கோடி புவிசார் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இது வேறொன்றுமில்லை... நீங்கள் நடும் மரக்கன்றை போட்டோ எடுத்து, இந்த இயக்கத்தின் வலைத்தளத்தில் (www.greentnmission.com) பதிவேற்றுவதுதான்.

நாற்றாங்கால் விநியோகம் குறித்த தகவல்களுக்குக் கட்டணமில்லாச் சேவை எண் 1800 599 7634 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.



**சுற்றுச்சூழலையும் ஆரோக்கியத்தையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் இந்த இயக்கத்தின் முயற்சியில், வனத்துறையுடன், உழவர் நலத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகியவையும் இணைந்துள்ளன.**

### பிரிட்டன் நாடாளுமன்றத்தில் திருக்குறள்!




பிரிட்டன் அரசியல்வாதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான, தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த உமா குமரன், திருக்குறள் மொழிப்பெயர்ப்பு நூலை முதன்முதலாக, அந்நாட்டு அவைத் தலைவருக்குப் பரிசாக அளித்துள்ளார். பிரிட்டன் நாடாளுமன்றத்தின் முதல் தமிழ் வம்சாவளி உறுப்பினர் என்பதால், அடுத்து வரும் தமிழ் உறுப்பினர்கள் திருக்குறளை வைத்து, பதவி ஏற்க முடியும் என்றும் கூறி இருக்கிறார், உமா குமரன்.

இவரது இந்தச் செயலுக்கு, திருக்குறளை உலகளாவிய இயக்கமாக நடத்திச் செல்லும் தமிழ் ஆர்வலர்கள் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர். இதை உதாரணமாகக் கொண்டு, உயர்மட்டத்தில் உள்ள தமிழ் ஆளுமைகளும், தொழிலில் வெற்றிபெற்றவர்களும் தங்களின் அடையாளத்தில் பெருமிதம் கொண்டு, திருக்குறள் மொழிபெயர்ப்புகளைப் பரிசாகக் கொடுத்துப் பழகவேண்டும் என, உலக மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புத் தொகுப்புத் திட்டக்குழுவைச் சேர்ந்த தமிழ் அறிஞர்கள் வேண்டுகோள் வைத்துள்ளனர்.

பிரிட்டன் நாடாளுமன்றத்தில் சமீபத்தில், அந்த நாட்டின் பொறியியல் வல்லுநர், முல்லை–பெரியாறு அணையைக் கட்டிய கர்னல் ஜான் பென்னி குக் குறித்து அறிமுகம் செய்யப்பட்டதுடன், இந்தியாவில், தமிழ்நாட்டில் அவருக்குக் காட்டப்படும் மரியாதை குறித்தும் உறுப்பினர் ஒருவர், அவையில் பெருமையுடன் குறிப்பிட்டார். தமிழும், தமிழர்களும் எந்த அவையிலும் தாய் நிலத்துக்குப் பெருமை சேர்ப்பதை சமூக வலைத்தளங்களில் பலரும் பகிர்ந்து வருகின்றனர்.

### ஃப்ளாஷ்பேக்



#### ஈழத் தமிழர் ஆதரவு!



சொ.ஜெயக்குமார்

2006–ஆம் ஆண்டு, சென்னை, கலைஞர் நகர், பகுதி 65–வது வட்டக் கழகத் துணைச் செயலாளராகப் பொறுப்பு வகித்தபோது, தலைமைச் செயலகத்தில் தலைவர் கலைஞர் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது, ஈழத் தமிழர் ஆதரவு நிதி வழங்கினேன். அந்தத் தருணத்தில் எடுத்துக்கொண்ட புகைப்படம்.

**–சொ.ஜெயக்குமார்,**
**மாவட்டப் பிரதிநிதி, சென்னை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


#### இடைத்தேர்தலும் கழக வளர்ச்சியும்...

1958–ஆம் ஆண்டு, திருவாடானைத் தொகுதிக்கு இடைத் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில், கழக வேட்பாளராக தேவக்கோட்டை இராம.வெள்ளையன் போட்டியிட்டார். ஏப்ரல் மாதம் நடைபெற இருந்த தேர்தலுக்கு, பிப்ரவரியிலேயே வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தனர். ‘கழகம் வென்றுவிடும் என்பதற்காக திருவாடானை இடைத்தேர்தலில் போட்டியிடவில்லை. 1957–ஆம் ஆண்டு தேர்தல் முடிந்து, கழகத்தின் வளர்ச்சி எப்படி இருக்கிறது என அறிந்துகொள்வதற்காக இடைத்தேர்தலை கழகம் பயன் படுத்திக் கொண்டது’ என ‘நம்நாடு’ இதழ் தலையங்கம் எழுதியது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

553

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131